ISSN:2582-9599



# பருவ இதழ்களில் வாழ்வியல் சிந்தனைகள்

37

சு. விமலா
முனைவர் பட்ட ஆய்வாளர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, சேலம் - 8.
மின்னஞ்சல்: vimallotussubu@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

பருவ இதழ்களில் ஒன்றான குங்குமம் இதழில் மனிதனின் வாழ்வியல் பொருண்மைகள் குறித்த செய்திகள் அடங்கியுள்ளது என்பதே இதன் ஆய்வுச் சுருக்கமாகும்.

**ஆய்வு எல்லை**

2018 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ள குங்குமம் இதழ்கள் மட்டுமே ஆய்வு எல்லையாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**கலைச்சொற்கள்:**

கோலாகலம் - கொண்டாட்டம், ஆடம்பரம்

ஏடு - ஓலை, நாளேடு, தாள்

ஊடல் - தலைவன் தலைவியருள் உண்டாகும் பிணக்கு, பொய்ச்சினம்

**முன்னுரை:**

இதழ்கள் என்பது மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. அச்சிட்ட செய்திகளையும், கருத்துக்களையும் இயற்கையான கலைப் படைப்புகளை அறியவும் அவற்றை பகிர்ந்து கொள்ளவும் வெளிவருகின்றன தகவல் தொடர்பு சாதனங்களில் ஒன்றாக கருதப்படுகின்றன.

மேலும் இவை இதழ்கள் என்ற பொதுச் சொல்லால் குறிப்பிடப்பட்டாலும் , வெளிவருகின்ற காலம், அதில் இடம் பெற்றுள்ள உள்ளடக்கம் போன்றவைகளைக் கொண்டே சிறப்புறுகின்றன.

செய்திகளைப் பதிப்பித்து அவற்றை கால அடிப்படைக் கொண்டு இதழ்களை நாளிதழ் , வார இதழ், மாத இதழ் , மாதமிருமுறை வரும் இதழ் , காலாண்டு இதழ் எனப் பகுத்து வகைப்படுத்துகின்றனர். அந்த வகையில் வார இதழ்களில் ஒன்றான குங்குமம் இதழில் காணப்பட்டுள்ள வாழ்வியல் பொருண்மைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**இலக்கியமும், இதழும்:**

இலக்கியம் என்பது வாழ்க்கையினைப் பிரதிபலிப்பதாகும். மனிதனுக்குத் தேவையான நன்மைத் தீமைகளை சுட்டிக்காட்டி அவற்றை விளக்குவதாகும். இலக்கியம் குறித்து பல அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களை கூறியுள்ளனர். அதில்,

> **“மக்களை நல்வழியிலே நடக்கச்செய்யும் தன்மையும் பெருமையும் உள்ள நூல்களே இலக்கியங்கள் ஆகும்”1**

என்கின்றனர் சில அறிஞர்கள். படிப்பவரின் மனதை விரிவாக்கி , குறைகளைப் போக்கி அவற்றை நல்வழிப்படுத்தும் இயல்பு உள்ளதே இலக்கியமாகும். இப்படிப்பட்ட இலக்கியத் தளத்தில் இதழ்களும்

ஓர் இன்றிமையாத இடத்தைப் பெற்று வருகின்றது. இலக்கிய நூல்கள் எவ்வாறு வாழ்வியலின் எல்லாத் துறைகளையும் தழுவி நிற்கின்றதோ , அவ்வாறே இதழும் எல்லா வாழ்வியல் கூறுகளிலும் இரண்டறக் கலந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**"ஏற்றமுறச் செய்வதும் மாற்றமுற**

**வைப்பதும் ஏடேயாகும்"**2

என்ற வரிகள் இதழ்களின் சிறப்புக்களை எடுத்து இயம்பக் கூடியவையாகும். ஆக இலக்கியமும் , இதழும் ஒன்றோடு ஒன்று பின்னி பிணைந்திருப்பதை இதில் அறிய முடிகிறது.

**வாழ்வியல் பொருண்மைகள்:**

வாழ்வியல் என்பது தனிமனிதன் என்ற நிலையைக் கடந்தும் அன்றாடம் ஒவ்வொரு மனிதனும் செய்கின்ற செயல்பாடுகள் அனைத்துமே வாழ்வியல் பொருண்மைகளாக காணப்படுகின்றன. அதில் இறைவழிபாடு, பழக்கவழக்கங்கள், தேவைகள், பொழுதுபோக்கு, செயல்பாடுகள், தொழில்கள், அரசியல், மருத்துவம், சட்டம் ஒழுங்கு குடும்ப சுழற்சிகள் என பல வாழ்வியல் அம்சங்களையும் கொண்டு இவை அடங்கும்.

மேலும் சமுதாயத்தில் அமைதியும் , மகிழ்ச்சியும் முழுமையும் நிலவ வேண்டுமென்றால் ஒவ்வொரு மனிதனும் தனக்கென சில கட்டுப்பாடுகள் , கடமைகள், ஒழுக்கங்கள் ஆகியவற்றை வகுத்துக் கொள்ள வேண்டும். இந்த கடமை மற்றும் கட்டுப்பாடுகளின் தொகுப்பைத்தான் வாழ்வியல் பொருண்மைகள் என்று அழைகின்றனர்.

எனவே வாழ்வியல் பொருண்மை என்பது தனிமனிதன் தொடங்கி சமூகம் வரை அனைவரையும், அனைத்துச் செயல்பாடுகளையும் , பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்தையும் உள்ளடக்கித் திகழ்வது ஆகும்.

**i) இறைவழிபாடு**

இறைவழிபாடு என்பது மனிதனை ஒருநிலைப்படுத்தி அவன் மனதைப் பக்குவப்படுத்துவதாகும். இறைவனை வழிபடுவதன் மூலம் மன அமைதியும் , ஒருநிலையும் கிடைப்பதனால் இவை வாழ்வியல் பொருண்மைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. எனவேதான் அனைத்து படைப்புகளும் இதழ்களும் இறைச் சிந்தனையை முன்வைக்கின்றன.

அந்த வகையில் குங்குமம் 2018 இதழில் இறைவழிபாடு குறித்து பேசப்பட்டுள்ளன. அதில்,

"எல்லாத்தையும் மேலே இருக்கிறவன் பார்த்துப்பான்'

என்பதுதானே கடைசி நம்பிக்கை? அந்த மேலே

இருப்பவன் யாரென்று மக்களுக்கு தெரியவில்லை"3

குங்குமம் இதழில் வெளிவருகின்ற இறைவழிபாடு என்பது 'பகவான்' என்ற தலைப்பின் மூலம் கட்டுரைகளாக வெளிவருகின்றன.

இதில் பகவான் என்ற சந்நியாசி ஒருவர் தன் ஆன்மீக செயல்களால் மக்களை நல்வழிப்படுத்தும் நோக்கம் குறித்து சொல்லப்பட்டுள்ளது. மேலும் இறைவழிபாடுகள் குறித்த செய்திகளை விளம்பரங்களாகவும் வெளியிடுகின்றது குங்குமம் இதழ்,

**"உங்கள் பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும் அது நிச்சயம் நிறைவேறுவதற்கு கருவன்னூர் காரணயில் ஸ்ரீ விஷ்ணுமாயா தேவஸ்தானத்தை தொடர்பு கொள்ளுங்கள்"**4

பூர்வ ஜென்ம பாவங்கள் , மனநிம்மதி பெற , குழந்தை பாக்கியம் , கணவன் - மனைவி பிரச்சனைகள் போன்றவைகளுக்கு இறைவழிபாட்டின் மூலம் பரிகாரம் செய்து அவற்றை நீக்கி தருவதாக மக்களுக்கு அறிவுறுத்தும் செய்தியை இவ்விதழ் வெளியிட்டுள்ளது.

ஆன்மீகம் என்பது மனிதனை நல்லது கெட்டது உணர வைத்து , அவன் மனதைப் பக்குவப்படுத்தக்கூடியது. சாதி , மதம் என்ற பேதமற்றது. பிறரையும் நம்மைப்போல் நேசிப்பதே ஆன்மீகத்தின் நோக்கமாகும். மனிதனை நல்வழிப்படுத்தக்கூடிய ஆன்மீக கருத்துகளை வெளியிடுவது இதழ்களின் கடமையாகும்.

எனவேதான் குங்குமம் இதழும் ஆன்மீகம் மற்றும் இறைவழிபாடு குறித்த தகவல்களை வாரம் வாரம் வெளியிடுகிறது. கடவுளிடம் மக்கள் வைக்கும் பக்தி அவர்களை வாழ்வாங்கு வாழ வைக்கும் என்பதை நம்பிக்கையுடன் எடுத்துக் கூறுகின்றது இவ்விதழ்.

மேலும், ‘அணையா அடுப்பு’, ‘அருட்பெருஞ்சோதி, அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி’ (குங்குமம், 2018), ‘அரசுதான் கோயில்களை நிர்வகிக்க வேண்டும் ’ (குங்குமம் 2018) போன்ற தலைப்புகளில் இறைவனின் பெருமைகளும் அதற்கான வழிபாடுகள் குறித்தும் வாழ்வியல் பொருண்மைகளாக எடுத்துக் காட்டியுள்ளனர் என்பது இதில் புலனாகிறது.

**ii) அரசியல்**

அரசியல் என்பது நம் வாழ்வியலை கட்டமைக்கக்கூடிய கூறுகளில் ஒன்றாகும். அந்த அரசியல் சிறப்பாக இருந்தால் மட்டுமே ஒரு மனிதனின் வாழ்க்கை சிறப்புற்று இருக்கும். அப்போதுதான் சமூகத்தின் வாழ்வும் மேன்மை அடையும். வாழ்வியல் பொருண்மைகளில் அரசியல் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

அரசியல் செய்திகளை குங்குமம் இதழ் நாகரிகமாக வெளிக்காட்டுகிறது. அரசு இயந்திரத்தில் என்னென்ன நிகழ்வுகள் நடக்கின்றன என்பதை மக்களுக்கு வெளிப்படுத்தி அவர்களுக்கு அறிவுறுத்தும் பணியை இதழ்கள் செய்கின்றன. அரசியல் பற்றிய கருத்துக்களை மக்களுக்கு அறிவுறுத்தி, இன்புறுத்தும் வாழ்வியல் கருவியாகவும் இதழ்கள் விளங்குகின்றன. அந்த வகையில் குங்குமம் 2018 இதழில் வெளிவந்துள்ள அரசியல் செய்தியானது,

> **“ஏற்கனவே சி.பி.ஐ , ஈடி, செபி என மத்திய அரசு தங்களுடைய அதிகாரத்தை நிலைநாட்டப்போய் அதில் உருவாகி இருக்கும் பிரச்சனைகளையும் , சட்டச்சிக்கல்களையும் உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டி இருக்கிறது”5**

‘மத்திய அரசு Vs ரிசர்வ் வங்கி என்ன நடக்கிறது ?’ என்ற தலைப்பில் வெளிவந்துள்ள மத்திய அரசு குறித்த செய்தியானது இதுபோன்ற பொருளாதார நெருக்கடிகளை தீர்க்காமல் மத்திய அரசும் , ரிசர்வ் வங்கியும் சண்டையிட்டால் பாதிக்கப்படுபவர் அப்பாவி மக்களும் , சாமான்யர்களும்தான் என்பதை இவ்விதழ் வலியுறுத்துகிறது. மேலும்,

> **“ரஃபேல் போர் விமான பேரத்தில் ரூ. 1.30 லட்சம் கோடி ஊழல் நடந்துள்ளது. இந்த ஊழல்களில் பிரதமர் மோடி சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி முழங்கி வருகிறார்”6**

‘ஆட்டம் காண்கிறதா பா.ஜ.க ? ஆட்டிப்படைக்கிறதா காங்கிரஸ் ...? என்ற தலைப்பில் ரஃபேல் என்கின்ற போர் விமானத்தை இந்தியாவில் தயாரிப்பதற்கு ஏற்பட்டுள்ள பணபரிவர்த்தனை

ஊழல்கள் குறித்து இரண்டு காட்சிகளின் விவாதங்களை மக்களின் கண்பார்வைக்கு கொண்டுச் செல்லும் முனைப்போடு இவ்விதழ் செயல்பட்டுள்ளது.

மேலும், 'இந்த ஊருக்கு என்னதான் ஆச்சு ' பிரதமரின் நமோ டி.வி (குங்குமம் 2018) 'குடிநீர் பிரச்சனையை சமாளிக்கத் தேவை கழிவுநீர் மேலாண்மை! ' (குங்குமம் 2018), 'தேர்தல் முடிந்ததும் இதுதான் நடக்கும் ' (குங்குமம் 2018) 'நீதிமன்றமா, நாடாளுமன்றமா? (குங்குமம் 2018) போன்ற தலைப்புகளின் மூலம் அரசியல் சார்ந்த செய்திகளை வெளியிட்டு மக்களை நல்வழிப்படுத்தக்கூடிய செயலை இவ்விதழ் மேற்கொண்டு வருகின்றது.

மக்களின் வாழ்வியல் சிறப்பாக அமைய நாடும் , மக்களும், நாட்டை ஆளும் அரசும் சிறப்புற செயல்பட வேண்டும். இதனால் தான் அரசியலும் வாழ்வியல் பொருண்மைகளில் ஒன்றாக அறியப்படுகிறது.

**iii) நகைச்சுவை:**

மனமகிழ்வு இருந்தால் மட்டுமே நம் வாழ்வும் மகிழ்வுறும் என்ற பொருண்மையில் நகைச்சுவையான செய்திகளை இதழ்களில் வெளியிட்டு வாசகர்களை கவரக்கூடிய இதழ்களாக குங்குமம் இதழ் திகழ்கின்றது. அந்த வகையில்,

**"தம்மாத்துண்டு மேட்டரு**
**இன்னா ஷோக்கா கீது**
**எல்லா சேட்டையும் பண்ணுது**
**அதுக்கு பேரு செல்போனு"7**

'உறவு நெருங்குது உலகம் சுருங்குது' என்ற தலைப்பின் மூலம் நகைச்சுவையான செய்திகளை கேலிச் சித்திரங்களை கொண்டு வடிவமைத்துள்ளனர் இதழாசிரியர்கள். அதுமட்டுமின்றி குங்குமம் 2018 இதழில் வெளிவந்துள்ள 'நீ இல்லாங்காட்டி பேஜாரு' என்ற தலைப்பில்,

**"உன்னநானு கட்டிக்கினு இன்னாத்த**
**சொகத்தைக் கண்டேன்!**
**நகையுண்டா! நட்டுண்டா! காதுலயும்**
**கழுத்துலயும் பேரு உண்டா! பெருமையுண்டா"8**

என்று கணவன்-மனைவி இடையே நிகழும் ஊடல்களை வெளிப்படுத்தும்போதுகூட நகைச்சுவை உணர்வோடு சித்திரங்களின் மூலம் சிந்திக்க வைக்கின்றது.

மேலும், 'பாவமன்னிப்பு', 'காதலுக்கு மரியாதை ' (குங்குமம் 2018) போன்ற திரைப்பட தலைப்புகளின் மூலம் நகைச்சுவையான செய்திகளை வெளியிட்டு இதழ்களை வாசிக்கும் வாசகர்களுக்கு சலிப்புத்தன்மை ஏற்படுத்தாமல் ஆர்வத்தைத் தூண்டுகிறது இவ்விதழ்.

மன நிம்மதியும், மகிழ்வுமே மனித சமூகத்திற்கு ஆணிவேர் ஆகும். மனம் மகிழும்போது தான் வாழத் தோன்றும். எனவேதான் வாழ்வியல் பொருண்மைகளில் இன்றியமையாத கூறாக நகைக்சுவை திகழ்கிறது.

**iv) மருத்துவம்**

மருத்துவம் என்பது மனித வாழ்வில் ஓர் அங்கமாக திகழ்கின்றது. அதனாலேயே இது வாழ்வியல் பொருண்மையாகவும் உணரப்படுகிறது. இன்றைய காலக்கட்டத்தில் மக்களின் வாழ்வாதாரமே மருத்துவ துறையை நாடிதான் இருக்கின்றது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

மக்களின் பாதுகாவலனாக விளங்குகின்ற தகவல் தொடர்பு சாதனங்களின் ஒன்றான இதழ்களும்கூட , மருத்துவம் குறித்த செய்திகளை இதழ்களில் வெளியிட்டு வாசகர்களின் நன்மைக்கு ஊன்றுகோலாக திகழ்கிறது. அந்த வகையில் மருத்துவதுறையில் என்ன பலன், என்ன நடக்கின்றன என்பதை குங்குமம் இதழ் மக்களுக்கு அறிவிக்கின்றது. அதில்,

**“தேங்காய் எண்ணெய் ஆரோக்கியமானதல்ல, அது**
**மாரடைப்பைக் கொண்டு வரும் விஷம் என்று**
**ஹார்டுவர்டு பல்கலைக்கழகத்தின் சமீபத்திய ஆய்வு”9**

‘தேங்காய் எண்ணெய் மாரடைப்பை ஏற்படுத்துமா ?’ என்ற தலைப்பில் வெளிவந்துள்ள மருத்துவம் குறித்த செய்திகளில் ஹார்டுவர்டு பல்கலைக்கழகம் ஆய்வு மேற்கொண்டு கூறிய செய்தி தவறானது, தேங்காய் எண்ணெயில் உள்ள ‘லாரிக் அமிலம்’ நோய் எதிர்ப்பு சக்தி கொடுப்பதோடு , தோல் பிரச்சனை , ‘அல்சைமர்’ என்கிற மறதி நோய் போன்றவற்றை இவை குணப்படுத்தும் என்று டாக்டர். பி.எம்.ஹெக்டே கூறியுள்ளார்.

இச்செய்தியானது மக்களுக்கு எது சரி , தவறு என்று அறிவுறுத்தும் பணியாக அமைந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மேலும்,

**“சுவாச சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கும் , அலர்ஜிக்கும் தனிப்பட்ட ஆயுர்வேத மருந்து இருக்கு. ‘பங்கஜ கஸ்தூரி ப்ரித் ஈஸி இனி சுவாசிக்கலாம் ஈஸியா”10**

இன்றையக் காலக்கட்டத்தில் அனைவருக்கும் உடலில் ஏற்படும் பிரச்சனைகளில் ஒன்று சுவாசப் பிரச்சனையாகும். இதனை சரி செய்து கொள்ள ஏற்ற மருந்தினை குங்குமம் இதழ் விளம்பரங்களின் மூலம் வெளியிட்டு வாசகர்களை நல்வழிப்படுத்துகின்றன.

**V) விளையாட்டு**

அக்காலம் முதல் இக்காலம் வரை விளையாட்டு என்பது அனைத்து தரப்பினரையும் வயது வரம்பு இன்றி ஈர்க்கக்கூடிய ஒன்றாகும். விளையாட்டு குறித்த செய்திகளையும் அதில் என்னென்ன வாய்ப்புகள் உள்ளன என்பதையும் இளைஞர்களுக்கு எடுத்துச் சொல்லும் கருவியாக குங்குமம் இதழ்கள் திகழ்கின்றன. அந்த வகையில் குங்குமம் 2018 இதழில் வெளிவந்துள்ள விளையாட்டு செய்தியில்,

**“கோலாகலமாக நடந்து முடிந்த 18வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 45 நாடுகளைச் சேர்ந்த 11.646 தடகள வீரர்கள் பங்கேற்றனர்”11**

‘Golden Indians’ என்ற தலைப்பில் நம் இந்திய வீரர்கள் ஆசிய போட்டிகளில் கலந்து கொண்டு தங்கம் வென்றுள்ளதை பெருமைப்படுத்தும் முகமாக இச்செய்தி வெளிவந்துள்ளது. இதில் என்னென்ன விளையாட்டு பிரிவுகள் உள்ளன. அதில் இளைஞர்கள் எவ்வாறு பயன்பெற வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது இவ்விதழ். மேலும்,

**“இந்தியாவில் முதல் மகளிர்**
**கார் பந்தயக்குழு”12**

என்ற தலைப்பில் பெண்கள் கார் பந்தயத்திற்கு என்றே குழு அமைத்து அதில் பெண்களை பங்குபெற வைப்பது மட்டுமல்லாமல் பெண்களின் முன்னேற்ற பாதைக்கு வழிவகை செய்கின்றது என்பதை

இதன்மூலம் அறியலாம். மேலும் ஈட்டி எறிதல் , தட்டுஎறிதல் போன்ற விளையாட்டு வீரர்களை பற்றியும் பேசியுள்ளது.

குங்குமம் 2018 இதழ்களில் வெளிவந்துள்ள செய்திகளில் இறைவழிபாடு முதல் விளையாட்டு வரை உள்ள அனைத்துமே நாம் வாழ்வியல் பொருண்மைகளாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் இலக்கியங்கள் சொல்லுகின்ற வாழ்வியலில் நமக்கு சரியானதை , இக்காலத்தில் நடப்பதை இதழ்கள் எடுத்துக் காட்டுகிறது.

**முடிவுரை:**

பருவ இதழ்களானது கண்டிப்பாக வாழ்வியல் பொருண்மைகளை எடுத்துக் சொல்கின்றன. ஏனென்றால் பருவ இதழ்கள் வாழ்வை கட்டமைக்கக்கூடிய ஒன்று. ஒவ்வொரு மனிதனின் நன்மை , தீமைகளைச் சுட்டிக் காட்டுகிறது. ஆக இதழ்கள் என்பது வாழ்வியல் பொருண்மைகளை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது என்பது சிறப்பிற்குரியதாகும்.

**தொகுப்புரை:**

1. இதழ்கள் என்பது மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கின்றது என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.
2. வாழ்வியல் என்பது தனிமனிதனின் கட்டுப்பாடு , கடமைகள், ஒழுக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது என்பது இதில் புலனாகிறது.
3. இறைவழிபாடு, மனிதனுக்கு மன அமைதியும் , ஒருநிலைபடுத்தும் தன்மையும் தருகின்றது என்பதை இதன் வழி அறியலாம்.
4. நாட்டு நடப்புகளை தெரிந்து கொள்வதற்கும் , நடப்பு நிகழ்வுகளை அறிந்து அதற்கேற்ற நல்ல வழிபாதையில் செல்ல வேண்டும் என்ற அரசியல் சார்ந்த செய்திகளை இதில் காணலாம்.
5. ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் ’ என்ற பழமொழிக்கு ஏற்ப மருத்துவம் குறித்த செய்திகளை இதழ்களின் வெளியிட்டு வாசகர்களின் நலனை பேணுகிறது இவ்விதழ் என்பது இதில் புலப்படுகிறது.
6. சிரிக்கவும், சிந்திக்கவும் தேவையான நகைச்சுவை கருத்துக்களை ஆங்காங்கே புகுத்தி , வாசகர்களின் சலிப்புத் தன்மையை போக்குகிறது என்பது இதன் வழி புலனாகிறது.
7. மேலும் இளைஞர்களுக்கான விளையாட்டுகளை அறிமுகம் செய்வதோடு மட்டுமின்றி , வீரர்களின் பெருமைகளையும் சுட்டிக்காட்டியுள்ளது. இவ்விதழ் என்பதை இதில் காணலாம்.
8. நடப்பியல் உள்ள வாழ்வியல் பொருண்மைகளைப் பட்டியலிடுகிறது இவ்விதழ் என்பது சிறப்பிற்குரியது.

**அடிக்குறிப்புகள்**

1. ‘இலக்கியம் என்றால் என்ன ?’ சிதம்பரனார். சாமி, ப.16, ப.2017, ஸ்ரீசெண்பகா பதிப்பகம், 32B, கிருஷ்ணா தெரு, சென்னை - 600017.
2. ‘பாரதிதாசன் கவிதைகள்’, பாரதிதாசன், ப.184, ப. 1983, செந்தமிழ் நிலையம், இராமச்சந்திரபுரம், சென்னை.
3. ‘குங்குமம் இதழ்’, ப.46, 16 நவம்பர் 2018, 73, MRC நகர் மெயின்ரோடு, சென்னை -600028.
4. ‘குங்குமம் இதழ்’, ப.145, 5 அக்டோபர் 2018, 73, MRC நகர் மெயின்ரோடு, சென்னை-600028.
5. ‘குங்குமம் இதழ்’, ப. 23, 11 நவம்பர் 2018, 73, MRC நகர் மெயின்ரோடு, சென்னை-600028.

6. ‘குங்குமம் இதழ்’, ப. 29, 5 ஏப்ரல் 2018, 73, MRC நகர் மெயின்ரோடு, சென்னை -600028.
7. ‘குங்குமம் இதழ்’, பக்.48-49, 24 டிசம்பர் 2018, 73, MRC நகர் மெயின்ரோடு, சென்னை -600028.
8. ‘குங்குமம் இதழ்’, ப.40, 8 பிப்ரவரி 2018, 73, MRC நகர் மெயின்ரோடு, சென்னை -600028.
9. ‘குங்குமம் இதழ்’, ப. 81, 16 ஜூலை 2018, 73, MRC நகர் மெயின்ரோடு, சென்னை -600028.
10. ‘குங்குமம் இதழ்’, ப. 18, 17 மார்ச் 2018, 73, MRC நகர் மெயின்ரோடு, சென்னை -600028.
11. ‘குங்குமம் இதழ்’, பக்.9 -10, 14 மே 2018, 73, MRC நகர் மெயின்ரோடு, சென்னை -600028.
12. ‘குங்குமம் இதழ்’, ப. 21, 28 டிசம்பர் 2018, 73, MRC நகர் மெயின்ரோடு, சென்னை -600028.